நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த
# தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம் : உயர்நிலை

‘

## November 2005

பல்தேர்வு வினாக்கள் : 40
இடைவெளி நிரப்புதல் மற்றும் ஆக்கத்திறன் வினாக்கள் : 20

வழங்கப்பட்ட நேரம் : 70 நிமிடங்கள்

வாசிப்பதற்கு வழங்கப்படும் நேரம் : 10 நிமிடங்கள்

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாள்களில் குறியிடுக.**

பெயர் : ______________________________

அடையாள இலக்கம் :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**வினாக்கள் 1 - 5 : பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுக்கவும்.**

1. ‘நன்று உள்ளக்கெடும்’ என்பதில் வரும் **உள்ள** என்பது:

(a) உள்ளம்
(b) நினைக்க
(c) இருப்பது
(d) இல்லாதது

2. ‘இடுக்கண் களைவதாம் நட்பு’ என்பதில் **இடுக்கண்** என்பது:

(a) இருகண்
(b) இடுவது
(c) துன்பம்
(d) இடைவெளி

3. ‘கோடாமை சான்றோர்க்கு அணி’ என்பதில் வரும் **கோடாமை** என்பது:

(a) வளையாதிருத்தல்
(b) ஒரு பக்கம் சாயாதிருத்தல்
(c) மேற்கூறிய இரண்டும் சரி
(d) எல்லாமே தவறு

4. ‘வாலறிவன் நற்றாள் தொழார் எனின்’ என்பதில் வரும் **வாலறிவன்** என்பது

(a) அறிஞன்
(b) கடவுள்
(c) ஆசிரியன்
(d) தேவர்

5. ‘தந்தை மகற்கு ஆற்றும் நன்றி’ என்பதில் வரும் **நன்றி** என்பது

(a) உதவி
(b) நன்மை
(c) மேற்கூறிய இரண்டும்
(d) இவை எதுவுமில்லை

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 6 - 10 பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லை தரப்பட்ட சொற்களிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.**

6. ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத பிறர் வழங்கும் புகழுரை.

(a) அணிந்துரை
(b) என்னுரை
(c) முடிவுரை
(d) பதிப்புரை

7. பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்டு கவிபாடுதல்

(a) கவிபாடுதல்
(b) அறம்பாடுதல்
(c) அறம் ஓதுதல்
(d) புலம்புதல்

8. புதிதாகச் செய்த தேர், கப்பல் போன்ற வாகனங்களை முதன்முதலாகச் செலுத்திப் பார்த்தல்

(a) முதல் ஓட்டம்
(b) கன்னி ஓட்டம்
(c) வெள்ளோட்டம்
(d) பயிற்சி ஓட்டம்

9. ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தோன்

(a) அட்டாவதானி
(b) சதாவதானி
(c) பேரவதானி
(d) இவை எல்லாம் சரி.

10. கலைத்துறைகள் பலவற்றையும் பற்றிய தகவலை அகராதி ஒழுங்கிலே தரும் நூல்

(a) அகராதி
(b) கலை அகராதி
(c) கலை அகரவரிசை
(d) கலைக்களஞ்சியம்

**வினாக்கள் 11 - 15 : ஒவ்வொரு வினாவிலும் பிழையாக எழுதப்பட்டு அடிக்கோடிடப்பட்ட சொற்களுக்கு ஏற்ற சரியான சொற்களைத் தேர்ந்தெடுக்கவும்.**

இங்கு வாழ்க்கை இயந்திரமயமானதாக இருக்கிறது. ஓய்வின்றி மக்கள் **அள்ளாடுகின்றனர்**. ஒரு காலைப் பொழுதில் சிட்னி நகருக்குச் சென்று பார்த்தால் நான் சொல்வதன் உண்மை புரியும். நிதானமாக நடந்து செல்லும் எவரையும் காணமுடியாது. எல்லோரும் ஓட்டமும் நடையுமாக **பெருந்தைப்** பிடிக்க அல்லது அதிலிருந்து இறங்கி செல்கின்றனர். புகைவண்டியிலிருந்து இறங்குவோரும் அதைப்போலவே வேகமாகவே செல்கின்றனர். ஒரு கையில் கைப்பையும் மறுகையில் ரொட்டித்துண்டு அல்லது தேனீர்க் கோப்பையுடன் இவர்கள் செல்கின்றனர். காலையில் **ஒளுங்காகச்** சாப்பிடக்கூட நேரமின்றி இவர்கள் இயங்குவதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது. **மலை** நேரத்திலும் இதே கோலம் தான். ஏன் இந்த நிலை? தம் தொழில் மீது அவர்களுக்கு இருக்கும் விருப்பு என்று சொல்லலாமா? அல்லது தம் தொழிலைத் தக்க வைக்க இது தான் வழியா? இதுவா **வெளிநட்டு** வாழ்க்கை என்று ஒரு புறம் அதிசயித்தாலும் மறு புறம் மனத்தின் ஒரு மூலையில் இனம்புரியாத ஓர் ஏக்கம் வாட்டுகிறது.

11. **அள்ளாடுகின்றனர்**

(a) அல்லாடுகின்றனர்
(b) அள்லாடுகின்றனர்
(c) அல்ளாடுகின்றனர்
(d) அல்லலாடுகின்றனர்

12. **பெருந்தை**

(a) பெறுந்தை
(b) பேறுந்தை
(c) பேருந்தை
(d) பெயருந்து

13. **ஒளுங்காக**

(a) ஒழுங்காக
(b) ஒலுங்காக
(c) ஒளுங்காக
(d) ஒருங்காக

14. **மலை**

(a) மளை
(b) மாளை
(c) மாலை
(d) மாழை

15. **வெளிநட்டு**

(a) வேலைநாட்டு
(b) வேளைநட்டு
(c) வெழிநாட்டு
(d) வெளிநாட்டு

**வினாக்கள் 16-20 : திரு சுகி சிவம் அவர்களின் உரையிலிருந்து ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதனை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையை தேர்ந்தெடுக்கவும்.**

‘என்னால் இதைச் செய்யவே முடியாது’ என்பது கோழைத்தனம். ‘முடியும்’ என்பது தன்னம்பிக்கை. ‘என்னால் மட்டுமே முடியும் வேறு எவனாலும் முடியாது’ என்பது ஆணவம். நமது தன்னம்பிக்கையை, உலகில் பலர் ஆணவமாகக் குழப்பிக் கொள்வது உண்டு. ஆனால், ஆணவத்தை ‘தன்னம்பிக்கை’ என்று எவரும் பாராட்ட மாட்டார்கள்!

தன்னம்பிக்கை உள்ளவர்கள்கூட தற்புகழ்ச்சி செய்து கொள்ளக் கூடாது. தற்புகழ்ச்சி, தன்னம்பிக்கையை அதிகரிக்காது, அசிங்கப்படுத்தி விடும். இன்றைக்கு இலக்கியம், சமயம், அரசியல் எல்லா இடங்களிலும் வெட்கமே இல்லாமல் பலர், தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வது அருவருப்பாக இருக்கிறது. ஆபாசமாக ஒலிக்கிறது!

‘தற்புகழ்ச்சி எவ்வளவு பெரிய பாவம்!’ என்று தர்ம சாஸ்திரம் சொல்லியிருப்பது பலருக்குத் தெரியவில்லை.

16. கோழைத்தனம் என்பது

(a) என்னால் மட்டுமே முடியும் என்று நினைப்பது
(b) என்னாலும் முடியும் என்று நினைப்பது
(c) என்னால் இதனைச் செய்ய முடியாது என நினைப்பது
(d) இவை எதுவும் சரியல்ல.

17. மிகப்பொருத்தமான கூற்று

(a) ஒருவர் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்வது அருவருப்பானது
(b) தன்னம்பிக்கை உள்ளவர்கள் தற்புகழ்ச்சி கொள்வது குற்றமல்ல.
(c) தற்புகழ்ச்சி தன்னம்பிக்கையை அதிகரிக்கும்
(d) மேற்கூறிய எல்லாம் சரி.

18. பின்வருவனவற்றுள் தவறான கூற்று.

(a) ஆணவத்தை தன்னம்பிக்கை என எவரும் பாராட்டமாட்டார்கள்
(b) தற்புகழ்ச்சி கொள்வது தவறானது என எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.
(c) தற்புகழ்ச்சி தன்னம்பிக்கையை அசிங்கப்படுத்திவிடும்.
(d) தலைக்கனம் உள்ளவர்கள் தன்னைத் தானே வியந்து, புகழ்ந்து பேசுவர்.

19. மிகச்சரியான கூற்று

(a) என்னால் இதனைச் செய்யமுடியும் என்பது தன்னம்பிக்கை
(b) இதனை வேறு எவராலும் செய்ய முடியாது என்பது ஆணவம்.
(c) சமயம், அரசியல், இலக்கியம் என எல்லா இடங்களிலும் இருப்பவர்கள் தம்மைத் தாமே புகழ்ந்துகொள்வது அருவருப்பானது.
(d) மேற்கூறிய எல்லாம் சரி.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

20. இவ்வுரைப்பகுதியில் சுகி சிவம் வலியுறுத்த விரும்புவது.

(a) ஆணவமும் தன்னம்பிக்கையும் வேறுபட்டவையல்ல.
(b) தற்பெருமை பேசுவதில் தவறில்லை
(c) தன்னம்பிக்கை உள்ளவர்கள் தற்புகழ்ச்சி கொள்ளலாம்.
(d) தம்மைத் தாமே புகழ்ந்து கொள்வது அருவருப்பானது.

**வினாக்கள் 21 - 25 : மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

21. தொல்காப்பியம் என்ற இலக்கண நூலை ஆதாரமாக வைத்து தமது எளிய தமிழ் நடையில் தொல்காப்பியப்பூங்கா என்ற நூலை எழுதியவர்

(a) புலவர் கீரன்
(b) கலைஞர் கருணாநிதி
(c) கவிஞர் கண்ணதாசன்
(d) பேராசிரியர் மு.வரதராசன்

22. சிலப்பதிகாரம் என்னும் இனிய முத்தமிழ் நூலில் தோய்ந்து, தெளிந்து அதன் பயனாக யாழ் நூல் எனும் இசை ஆராய்ச்சி நூலை ஆக்கிய ஈழத்து அறிஞர்

(a) பண்டிதமணி கணபதிப்பிள்ளை
(b) புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
(c) சுவாமி விபுலாநந்த அடிகள்
(d) சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம்

23. உலகநாடுகள் பலவற்றிற்கும் சென்று பல மொழிகளையும் கற்றுவந்த பின்னர் பக்தியை வெளிப்படுத்த சிறந்த மொழி தமிழ் மொழியே என கூறிய தமிழ் அறிஞர்

(a) வணக்கத்திற்குரிய தனிநாயக அடிகள்
(b) தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்
(c) திரு வி.க.
(d) கவிஞர் சுரதா.

24. பேர்சிவல் பாதிரியாருக்கு தமிழ்ப்பண்டிதராக இருந்தவர்

(a) நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்
(b) யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர்
(c) பண்டிதர் கிருஸ்ணபிள்ளை
(d) மேற்கூறிய எதுவும் சரியல்ல.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

25. திருவாசகத்தை மேற்கத்திய இசைக்கலை வல்லுனர்களுடன் இணைந்து சிம்பொனி இசைவடிவில் வழங்கிய பெருமைக்குரியவர்

(a) ஏ.ஆர். ரகுமான்
(b) சாகிர் உசேன்
(c) விஸ்வநாதன் இராமமூர்த்தி
(d) இசைஞானி இளையராஜா

**வினாக்கள் 26 – 31 : மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

26. சங்க இலக்கியங்கள் என போற்றப்படுபடுவை

(a) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
(b) கந்த புராணமும் பெரியபுராணமும்
(c) எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்
(d) இவை எதுவுமல்ல.

27. பரிமேலழகர் எந்த நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

(a) திருக்குறள்
(b) நாலடியார்
(c) சீவகசிந்தாமணி
(d) பத்துப்பாட்டு

28. காதலும் வீரமும் தமிழர்களின் ஒழுக்கமாகப் போற்றப்பட்ட காலம்

(a) பத்தொன்பதாம் நூற்றாண்டு
(b) சோழர் காலம்
(c) பல்லவர் காலம்
(d) சங்க காலம்

29. தமிழகத்தை சோழப் பெருமன்னர்கள் ஆண்ட காலம்

(a) பக்திக் காலம்
(b) காப்பிய காலம்
(c) அறநெறிக்காலம்
(d) இருண்ட காலம்

30. நான்மாடக்கூடல் என இலக்கியங்களில் போற்றப்படும் தமிழக நகரம்

(a) திருவண்ணாமலை
(b) தஞ்சாவூர்
(c) மதுரை
(d) கன்னியாகுமரி

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 31 – 35: பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

31. கம்பியூட்டர் என்ற சொல்லுக்கு வழக்கிலிருக்கும் சொல்: **கணி** என்ற வேர்ச்சொல்லைக் கொண்டு உருவாகி தற்போது உலக இணைய மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட சொல்.

(a) கணிப்பான்
(b) கணினி
(c) கணனி
(d) இவை எதுவுமன்று

32. இணையம் என்பது

(a) உலகளாவிய அளவில் தமிழ் அமைப்புகள் இணைந்திருப்பது
(b) கணினிகள் ஒரு வலைப்பின்னனில் இணைந்திருப்பது
(c) தமிழோடு இணைந்திருப்பது
(d) இவை எதுவுமல்ல

33. இணையத்தில் மட்டுமே வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகை

(a) ஆனந்த விகடன்
(b) குமுதம்
(c) மல்லிகை
(d) திசைகள்

34. உலகளாவிய அளவில் தமிழ் இணைய மாநாடுகளை நாடாத்தும் அமைப்பு

(a) உலக தமிழ் இணைய மன்றம்
(b) உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம்
(c) தமிழக அரசு
(d) சிங்கப்பூர் அரசு

35. இணையத்தில் தமிழ் நூல்கள் கிடைக்கும் இடங்கள்

(a) மதுரைத் தமிழிலக்கிய மின்தொகுப்புத் திட்டம்
(b) தமிழ் மின்நூலகம்
(c) மேற்கூறிய இரண்டும் சரியானவை
(d) இணையத்தில் தமிழ் நூல்கள் கிடைப்பதில்லை.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினா 36 - 40 : பாரதி பாடிய பாடல்களில் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன தனித்துவமானவை. இங்கு குயில்பாட்டிலிருந்து சில வரிகள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து அதன் கீழ் காணப்படும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

. . . படைப்புக் கடவுளே! நான்முகனே!
காலம் படைத்தாய் கடப்பதிலாத் திக்கமைத்தாய்
ஞாலம் பலவினும் நாடோறும் தாம் பிறந்து
தோன்றி மறையும் தொடர்பாய் பல அனந்தம்
சான்ற உயிர்கள் சமைத்துவிட்டாய் நான்முகனே!
சாலமிகப்பெரிய சாதனை காண் இதுவெல்லாம்
தாலமிசை நின்றன் சமர்த்துரைக்க வல்லவர் யார்.
ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே
கானாமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா
காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா
பூதங்களொத்துப் புதுமை தரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?
ஆசைதருங் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசைதரும் இன்பம் . . . . . . . . . . இன்பமன்றோ

36. இப்பாடல் வரிகளில் பாரதியார் யாரை விளிக்கின்றார்?

(a) நான்முகன்
(b) குயில்
(c) மாடு
(d) மனிதன்

37. பிரம்மாவின் படைப்பினிலே மிகச்சிறந்த படைப்பென பாரதி வியப்பது

(a) உயிர்கள்
(b) அண்டங்கள்
(c) வானம்
(d) கானாமுதம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

38. ஐந்து பூதங்களும் சேர்ந்து உருவாக்கிய புதுமைகளோடு ஒப்பிட்டு அவற்றை விட உயர்ந்தது என கவிஞர் கூறுவது

(a) கோடி அதிசயங்கள்
(b) ஏழு கடல்
(c) மேற்கூறிய இரண்டும்
(d) நாதங்கள் சேரும் நயம்

39. ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசை தரும் இன்பம் ………………இன்பமன்றோ. இதில் விடுபட்ட சொல்

(a) எண்ணரிய
(b) அதிசயமாம்
(c) இனிமையான
(d) உவமையிலா

40. பாரதியார் கவிதைகளில் இப்பாடல் இடம்பெறுவது

(a) கண்ணன்பாட்டில்
(b) குயில் பாட்டில்
(c) பாஞ்சாலி சபதத்தில்
(d) பல்வகைப் பாடல்களில்

**வினா 40 – 50 : பின்வரும் உரைப்பகுதியில் காணப்படும் கீறிட்ட இடங்களை நிரப்புவதற்கு கூட்டுக்குள் தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க. பின்னர் அதனை விடைத்தாளில் பொருத்தமான எண்ணின் எதிரே எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **நெஞ்சுள்** | **மூடியது** | **ஞாபகம்** | **வேளையில்** | **பயணம்** | **அங்கு** |
| **வெளியேற** | **வயதை** | **பருவம்** | **வாழ்வின்** | **நடப்பும்** | |

இருபத்தொரு வயதில் எனக்கு இரண்டு தொழில் தகமைகள். திருமணம் புரியும் நோக்கம் அந்த ...........41.............. கிடையாது. இனி அவுஸ்திரேலியாவில் தங்கி வேறு எதுவும் செய்வதற்கு இல்லை. ஆகவே வெளிநாட்டுப் ...........42............ ஒன்று தான் தவிர்க்க முடியாததும் அன்றைய நாட்டு .........43............. ஆகும். எனது நண்பி ஒருவருடன் சிறிது கலந்தாலோசித்து விட்டு அவுஸ்திரேலியாவை விட்டு .........44............. திட்டமிட்டோம். நான் வெளியே காலடி எடுத்து வைத்தநாள் எனக்கு இன்னும் நல்ல ..........45............. பிரிவுத் துயரம் பொங்கி வழிந்தது. இன்று கூட அந்த நினைவு வரும்போது அன்றைய அதே விம்மல் ............46................ பொருமுகிறது. அன்று கடும் வெய்யில். ஒரே அவியல். இருபத்திரண்டு ........47..........நான் எட்டிக் கொண்டிருக்கும் பருவம். எனக்குள் ஒரு ஆற்றாமை உணர்வு. சாப்பிட முடியவில்லை.

எனது வெளிநாட்டுப் பயணம் எனது ...........48......... ஒரு சந்திப்பிரிவாக அமைந்தது. அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறிய முப்பது ஆண்டுகளில் ஒரு தடவை மட்டும் .........49...........சென்றிருக்கிறேன். அவுஸ்திரேலியாவில் இருந்து எனது வெளியேற்றம் எனது வாழ்வின் ஒரு அத்தியாயத்தை ..........50............ எனது சிந்தனையிலும், ஈடுபாடுகளிலும் அடிப்படை மாற்றம் ஏற்பட வழிகோலியது.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினா 51 – 55 : மேலே நீங்கள் வாசித்த உரைப்பகுதியின் தொடர்ச்சி கீழே தரப்பட்டுள்ளது. அதில் காணப்படும் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லை ஊகித்து, விடைத்தாளில் குறித்த இலக்கத்திற்கு எதிரே எழுதுக.**

அவுஸ்திரேலிய சினேகிதிகள் இருவருடன் இலண்டனையும் ஐரோப்பாவையும் .........51......... பார்த்தேன். இந்தப் பயணம் முழுவதிலும் சரி, இங்கிலாந்தில் நான் ……52…… போதும் சரி, பல அவுஸ்திரேலியர்களுடன் பழகக் கிடைக்காதது என் அதிஸ்டம். இல்லையென்றால் ஒரு ..........53................ இன்னொரு இடத்திற்கு எனது அவுஸ்திரேலிய கலாசாரத்தையும், உறவுகளையும் .................54..................... மட்டும் இருந்திருக்கும். மாறாக நான் தரிசித்த நாடுகளில் உள்ளூரவர்களோடு கூடி வாழவும், பணியாற்றவும் எனக்கு ...........55............ கிடைத்தமை பெரிது தானே?

**ஆக்கத்திறன் வினா: 56 – 60:**

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் தொடர்ச்சியை எழுதுக. ஐந்து வாக்கியங்களுக்கு குறையாமலும் 10 வாக்கியங்களுக்கு கூடாமலும் இருக்கவேண்டும்.**

உங்கள் குடுமபத்தினர் பசுபிக் தீவுகளுக்கு கப்பல் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு செல்கின்றனர். உமது அண்ணன் அவ்வாரம் சிட்னியில் நடைபெற இருக்கும் கிரிக்கெட் போட்டிக்குச் செல்லவேண்டும் எனக்கூறி உங்களுடன் வர மறுக்கின்றார். கப்பலிலே செல்லும்போது நீர் சிட்னி கிரிக்கெட் போட்டியை அகன்ற திரையில் பார்த்துக்கொண்டிருக்கிறீர். அப்போது அத்திரையினூடு தெரிந்த இரண்டு உயர் மாடிக்கட்டிடங்களும் மெல்ல மெல்ல சரிவது போல உமக்குத் தோன்றுகிறது. என்ன ஏது என்று சுதாகரிக்கமுன்னர் தொலைக்காட்சி ஒளிபரப்பு நின்றுவிடுகிறது. நீர் உமது அண்ணனின் கைத்தொலைபேசிக்கு தொடர்பு கொள்கிறீர். அப்போது .....